பத்திரிக்கை செய்தி

பெண் குழந்தைகள் நல திட்ட உதவி பெற ரூ.1,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய சமூக நல விரிவாக்க அலுவலர் மற்றும் உதவியாளர்கள் கைது

புகார்தாரர் திருமதி.சத்ய பிரியா, கரும்பாக்கம் கிராமம், திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது இரண்டு பெண் குழந்தைகளுக்காக அரசு திட்டத்தில் திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள சமூகநலத்துறை பிரிவில் நலத்திட்ட உதவி பெற விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திருமதி.உஷாராணி, சமூக நல விரிவாக்க அலுவலர், திருமதி.ஜெயலட்சுமி, உதவியாளர் மற்றும் திருமதி.வளர்மதி, உதவியாளர், திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோர்கள் தங்களுக்கு ரூ.1,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை செங்கல்பட்டு பிரிவில் அளித்த புகாரின் பேரில் நேற்று 22.06.2026, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.உஷாராணி, சமூக நல விரிவாக்க அலுவலர், திருமதி.ஜெயலட்சுமி, உதவியாளர் மற்றும் திருமதி.வளர்மதி, உதவியாளர், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோர்கள் லஞ்ச பணம் ரூ.1,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் மூவரும் கைது செய்யப்பட்டனர்.